## மட்டக்களப்பு மாநகரசபைத் தோதல்

Registered as a Newspaper in Ceylon ★★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 48

மலர் 9 இதழ் 30

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 28 ஜுல்கஃ 29 ஞாயிற்றுக்கிழமை [12-3-67]

## 4வட்டாரங்களில் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று முற்பகல் 9 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. புறுக்கினல் நகர சபை மண்டபத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கல்லடி, நாவற்குடா ஆகிய வட்டாரங்கள் கிராம சபை அந்தஸ்திலிருந்து மாநகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதை ஆட்சேபித்து இப்பகுதியில் உள்ள எவரும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை.

16-ம், 17-ம், 18-ம், 19-ம் வட்டாரங்களில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யாது அபேட்சகர்கள் பகிஷ்கரிப்புச் செய்தனர். 15-ம் வட்டாரத்தில் மட்டுமே அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். மட்டக்களப்பு தேர்தல் சரித்திரத்தில் இவ்வித பகிஷ்கரிப்பு செய்யப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

10-ம் வட்டாரத்தில் திரு. ஆர். [illegible]க்திரவேலு போட்டி

[6-ம் பக்கம் பார்க்

# இந்திரா மீண்டும் பிரதமர்; துணைப்பிரதமர் தேசாய்

## போட்டியைத் தவிர்ப்பதில் காமராஜர் வெற்றி

புதுடில்லி, மார்ச் 11

**உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துவந்த இந்தியப் பிரதமர் பதவி "நெருக்கடி"யை காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர் சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளார்.**

இந்தியப் பிரதமராக திருமதி இந்திராகந்தி தொடர்ந்திருப்பார். திரு. மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராகப் பதவியேற்பார்.

காங்கிரஸ் லோகசபை அங்கத்தவர்களும் ராஜ்ய சபை அங்கத்தவர்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை கூடி முறைப்படி பார்லிமெண்ட் காங்கிரஸ்கட்சித் தலைவரை [பிரதமரை] தேர்ந்தெடுப்பார்கள்.

தலைமைப்பதவிக்கு திருமதி இந்திராகாந்தியை எதிர்த்து திரு. மொரார்ஜி தேசாய் போட்டியிடுவார் என்று நேற்று நள்ளிரவு வரை எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் இன்று காலையில் திரு. மொரார்ஜிதேசாயை காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர் சந்தித்து ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தலைவர் தேர்தலில் போட்டியைத் தவிர்ப்பதற்கு தலைவர் காமராஜ் எடுத்துக் கொண்ட சிறப்பான நடவடிக்கைகளுக்காக பிரதர் இந்திராகாந்திஇன்று பாராட்டு தெரிவித்துக் கொண்டார்.

துணைப் பிரதமரின் பொறுப்புகளை தாமே நிர்ணயிக்கப் போவதாகவும், அவருடைய பொறுப்புகளைத் தவிர்ந்த வேறு அம்சங்களில் அவர் தலையிடமாட்டார் என்றும் பிரதமர் இந்திரா தெரிவித்திருக்கின்றார்.

துணைப் பிரதமர் பதவி மந்திரி சபையில் மிக உயர்ந்த பதவியென்றும் அதன் பொறுப்புகளை நிர்ணயிப்பது பிரத மந்திரியின் உரிமையென்றும் திரு. தேசாய் இன்று நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற சர்தார் பட்டேலுக்குப் பிறகு துணைப் பிரதமர் பதவியை திரு. மொரார்ஜி தேசாய் வகிக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

### பிரதமர், துணைப் பிரதமர் பதவிகள்

இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்களைத்

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு தற்காலிக சபாநயகர்

சென்னை, மார்ச் 11

தமிழ் நாடு கீழ்சட்டசபையின் தற்காலிக சபாநாயகராக திரு. மூக்கையா தேவரை தமிழ் நாடுகவனர் நியமித்திருக்கின்றார்.

இம் மாதம் 17-ம் திகதி நடைபெறவிருக்கும் சபாநாயகர் தேர்தலை திரு. மூக்கையா தேவர் தலைமை வகித்து நடத்துவார். அன்று மாலையில் நடைபெறும் கீழ்சபை மேல்சபை அங்கத்தவர்களைக் கொண்ட கூட்டத்தில் கவர்னர் உரை நிகழ்த்துவார்.

உசிலம்பட்டி தொகுதியில் சுயேச்சையாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. மூக்கையாதேவர் தமிழ்நாடு கீழ்சட்டசபையில் சுதந்திரக்கட்சிக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

## ஆலயப் பிரவேசத்துக்கும் சட்டம் இடம் கொடுக்கிறதா?

### விளக்கம் கொடுப்பதற்கு அரசாங்கஅதிபர் மகாநாடு கூட்டுகிறார்

யாழ்ப்பாணம் ஞாயிறு

'ஆலயப் பிரவேசத்துக்கும் சட்டம் இடங்கொடுக்கின்றதா' என்பது பற்றி விளக்கம் கொடுப்பதற்காக கோவில் தர்மகர்த்தாக்களுடன் கலந்தாலோசிப்பதற்காக இம்மாதம் 22-ம் திகதி மீண்டும் ஒரு மகாநாட்டை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூட்டுகின்றார்.

யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகத்தில் அன்று காலை 10 மணிக்கு இம்மகாநாடு நடைபெறும். ஏற்கனவே தேநீர்க் கடைகளிலும், சலூன்களிலும், சலவைத் தொழிற்சாலைகளிலும் மாத்திரம் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தினர் பிரவேசிக்கலாமெனவும் ஆலயங்கள் சொந்தக் காணிகளில் இருப்பதால் அங்கு பிரவேசம் செய்யச் சட்டம் இடம் கொடுக்காதெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

ஆனல் ஆலயப் பிரவேசத்துக்கும் சட்டம் இடம் கொடுப்பதாக அரசாங்க அதிபர் இப்போது கருதுவதாகவும் அது பற்றி இறுதி முடிவுகளை மேற்கொள்வதற்கென வடமாகாணத்தைச் சேர்ந்த கோவில்களின் தர்மகர்த்தாக்கள், முகாமையாளர்கள், அர்ச்சகர்கள், காரியாதிகாரிகள் அனைவரையும் ஒரு மகாநாட்டுக்கு அவர் அழைத்திருப்பதாகவும் அறியப்படுகின்றது. [ந. நி.]

## வீரமாகாளி அம்மன் கோவில் அர்ச்சகர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குள் பிரவேசித்த சிறுபான்மைத் தமிழர் சமூகத்தவர்கள் தாம் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தவர்கள் என்று தெரிவிக்கவேயில்லை. தாங்கள் நேரடி நடவடிக்கைகள் பற்றியோ, அன்றித் தம் ஆலயப் பிரவேசம் பற்றியோ] "எந்த வித சுலோகங்களையும், தாங்கிக்கொண்டோ கோஷித்துக்கொண்டோ அல்லது முன்னறிவிப்பின் பேரிலோ மேற்படி ஆலயத்துள் அவர்கள் பிரவேசிக்கவில்லை' என நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலுள் சிறுபான்

[6-ம் பக்கம் பார்க்க]

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

டாலர் அலுமினியம்

ONE-DOLLAR

யாழ்ப்பாண ரோட்டறி கிளப்பின் உடல் தேற்று வைத்திய நிலையத் திட்ட நிதிக்காக

செல்வி திரிபு சுந்தரி குமாரசாமி

அவர்கள் அளிக்கும்

பரதநாட்டிய கச்சேரி

நட்டுவாங்கம்

"நாட்டிய கலாகேசரி"

ஸ்ரீ வழுவூர் ராமையாபிள்ளை

ஸ்ரீ வழுவூர் சாமராஜன்

அவர்களது குழுவினர்

இடம்: யாழ். நகரமண்டபம்

காலம்: 14-3-67 செவ்வாய்க்கிழமை

மாலை: 6-30 மணி

பிரவேசக் கட்டணம்: ரூ. 25-00 (போஷகர்)

ரூ. 10-00, 5-00, 1-00 (மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2477

### மணிவாக்கு

தூங்கும் போதும்கூட அவன் திருவடிச்சிந்தனையோடு தூங்குதல்வேண்டும். அதுவே உண்மையான உள்ளத்தின் உண்மையான வழிபாடு.

—வாகீசர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 387.

யாழ்ப்பாணம் பராபவ ௵ மாசி ௴ 28 (12-3-67)


## வீரமாகாளி அம்பாள் காட்டிய கருணை

அமைதிப் புரட்சி ஒன்று அம்பாள் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாண நகரிலுள்ள வீரமாகாளிஅம்பாள் பல்லாண்டுகளாக வெளியே நின்ற ஹரிஜன மக்களை உள்ளே அழைத்து தரிசனம் கொடுத்திருக்கிறார். அன்பினாலும் பக்தியினாலும் ஆண்டவன் அருளைப் பெறலாம் என்பதை வீரமாகாளிஅம்பாள் ஆலயப் பிரவேசம் ஹரிஜன மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது. ஆண்டவன்முன் அனைவரும் சமம் என்பதை ஜாதி இந்துக்கள் எனத் தம்மைக் கருதுவோருக்கும் அம்பாள் உணர்த்தியிருக்கிறார். வீரமாகாளிஅம்பாள் ஆலயக்கதவுகள் திறந்தது போன்று யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இதர ஆலயக் கதவுகளும் அமைதியாகத் திறக்கப்படுமென எதிர்பார்ப்போம்.

தம்முள் ஒருபிரிவினரை ஒதுக்கி வைப்பது நீதியல்லவென்பதையும்ஆண்டவனைத் தரிசனம் செய்வதற்கு தமது சகோதரர்களைத் தடை செய்வது நியாயமல்லவென்பதையும் இந்துக்கள் உணர்ந்துள்ளனர். ஆயினும் காலம் காலமாக இருந்துவரும் ஒரு சமூகப் பழக்கத்தை உடனடியாக மாற்றிக்கொள்வதற்கு அவர்களில் சிலர் விரும்பவில்லை; சிலர் இத்தகைய மாற்றத்தினால் தெய்வ கெடுதல் ஏற்பட்டுவிடுமோவென அஞ்சுகிறார்கள். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னிருந்த நிலையைவிட இன்று சமூகத்தில் ஜாதிப் பாகுபாடு எவ்வளவோ குறைந்துள்ளது. இன்னும் அமைதிவழியில் முயற்சி செய்தால் தீண்டாமைக்கொடுமை நீங்கிவிடும் என்பது நிச்சயம்.

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் திருநெல்வேலியில் இருஆலயங்களுக்குச் சென்றபோது அந்த ஆலயங்களின் கதவுகள் மூடப்பட்டிருந்ததைக் கண்டு திரும்பிவிட்டனர். ஆலயம் திறந்திருக்கும்போது அங்கு சென்று வழிபடுவோமென அவர்கள்கூறியிருக்கின்றனர். தமிழ் மன்னர் காலத்திலிருந்து பிரசித்திபெற்ற ஆலயமாக விளங்கும் வீரமாகாளிஅம்பாள் ஆலயத்துக்கு அவர்கள் வழிபாடு செய்ய வந்தபோது அம்பாள் அவர்களுக்குத் தரிசனமளித்திருப்பது அமைதியும், அன்பும், பக்தியும் வெற்றியளிக்குமென்பதையே உணர்த்தியிருப்பதாகும்.

வீரமாகாளி அம்பாள் ஆலயத்தைப் போன்று திருநெல்வேலி ஆலயங்களும், யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள இதர ஆலயங்களும் அன்புக்கும் பக்திக்கும் வழிவிட்டுக் கொடுக்கும் என்று எதிர்பார்ப்போம். ஆலயங்கள் புனிதமானவை. அவன் தாள் வணங்கவும் அவனருள் பெறவேண்டும். அவன் அருளைப் பெற பக்தி சிரத்தையுடன் அவன் ஆலயங்களைநாடிச் செல்லும்அடியார்களுக்கு அவன்தரிசனம் கிடைக்க வேண்டுமென்பதும், அதற்கு ஐதிகம் என்னும் பெயரால் இடையூறு ஏற்படமாட்டாதென்பதும் எமது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும்.

# ''எமது தாய் மொழி தமிழ்: கலாச்சாரமொழி அரபு''

## ஜின்னா மைதானத்தில் அப்துல் மஜீத்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'கூட்டரசாங்கத்தின் போது 6000 முஸ்லிம் வாலிபர்களுக்கு ஆசிரியவேலை கிடைத்தது. 600 முஸ்லிம் பாடசாலைகள் கட்டப்பட்டன. 60 மாவட்ட பாடசாலைப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் தேசியஅரசாங்கம்ஆட்சிக்கு வந்தபின பயிற்சிக்கலாசாலையில் பாதிப்பேர்தான்தெரிவு செய்யப்பட்டனர். அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன'

ஜின்னா மைதானத்தில் நேற்றுமுன்தினமிரவுநடந்த இஸ்லாமிய சோஷலிஷ முன்னணிக் கூட்டத்தில் மூதூர் எம். பி. ஜனாப் அப்துல் மஜீத் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அப்துல்மஜீத் மேலும்கூறியதாவது:-''முஸ்லிம்களுக்கு கலாச்சார பல்கலைக்கழகம் வேண்டுமென்று 64ம்ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தில் கூட்டரசாங்கம் தெரிவித்தது. எங்களுடைய தாய் மொழி தமிழ். கலாச்சார மொழி அரபு. இஸ்லாமிய பாரம்பரியத்தை நிலைநிறுத்தவும், கலாச்சாரத்தை வளர்க்கவும் கலாச்சார பல்கலைக்கழகம் விரைவில் நிறுவவேண்டும்.''

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணிப்பொதுச்செயலாளர் செனேட்டர் ஜே. ஆர். எம். ஹமீம் கூறியதாவது: சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமிழருக்கு விரோதமான கட்சியல்ல. அடுத்து வரும் அரசாங்கம் சுதந்திரக்கட்சி அரசாங்கம்தான். தேசிய அரசாங்கம் முஸ்லிம்களைப் புறக்கணித்து வருகிறது. பிரதமர் டட்லிசேனநாயகாவின் தொகுதியிலுள்ள பள்ளிவாசலுக்கு கூரைபோடுவதைக்கூட அங்குள்ள சிங்களவர்கள் எதிர்த்து வருகிறார்கள். முஸ்லிம்களின் கல்விவளர்ச்சிக்குக் கூட்டரசாங்கம் பாடுபட்டது. அதனால் தான் சுதந்திரக் கட்சியை ஆதரிக்கிறோம்.''

ஜனாப் யூ.எல்.எம். பரூக், ஜெ.எம்.மொகடின், இளங்கீரன், தெஹியோவத்த எம். பி. திரு. தனபாலவீரசேகரா மற்றும் பலர் பேசினார்கள்.

# ''சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதி விலக்கு அளிக்குக''

## மருத்துவத்தாதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

'சகல மருத்துவத் தாதிகளுக்கும் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும்' என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த மருத்துவத் தாதிகள் மகாநாட்டில் நிறைவேறியது.

திருமதி எஸ். பரமேஸ்வரி தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் யாழ்ப்பாணம்எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் கலந்துகொண்டார்கள். மருத்துவத் தாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி எடுப்பதாகவும், இக்கோரிக்கைகள் பற்றி சுகாதார அமைச்சருடன் பேசுவதாகவும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

சில மருத்துவமனைகளில் ஒரே மருத்துவத் தாதியே இரவும் பகலும் கடமையாற்றவேண்டியிருப்பதால், நிலைமையை மாற்ற நடவடிக்கை கையாளுமாறு சுகாதார இலாகா அதிபரை கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது. சகல மருத்துவதாதிகளையும் பென்ஷன் உரிமைக்கு மாற்ற நடவடிக்கையெடுப்பதன் மூலம் ஏற்கனவே பென்ஷன் உரிமைக்கு மாற்றப்பட்ட மருத்துவ தாதிகளின் வெட்டப்பட்ட சகாய நிதிப்பணத்தை உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அதிபரைகேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டது

## இந்திரா மீண்டும்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து திருமதி இந்திராகாந்தி தொடர்ந்து பிரதமராகவிருப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. திருமதி இந்திரா காந்தி பிரதமராக தொடர்ந்திருக்கவும் துணைப்பிரதமராக தாம் பதவியேற்கவும் திரு. மொரார்ஜி தேசாய் சம்மதம் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பிரதமர் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### இந்திரா நன்றி

இந்தியப் பிரதமராகப் போட்டியின்றித் தாம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டது குறித்து திருமதி இந்திரா காந்தி மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

''ஒருமனதாக என்னைத் தெரிவுசெய்ததற்கு நான் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜருக்கும், மற்றும் நண்பர்களுக்கும், திரு. மொரார்ஜி தேசாய்க்கும் நான் நன்றி செலுத்துகின்றேன்'' என்று திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

### தேசாய் செய்தி

திரு. மொரார்ஜி தேசாய் இன்று காலையில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில், துணைப் பிரதமராகத் தாம் பதவியேற்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

''பிரதமர் இந்திரா காந்திக்கு முழு ஒத்துழைப்பும் அளிப்பேன்'' என்று திரு. தேசாய் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''துணைப் பிரதமராகப் பதவியேற்கும் தங்களுக்கு எந்தெந்த இலாகாக்கள் ஒப்படைக்கப்படும்?'' என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு திரு. மொரார்ஜி தேசாய், ''அவற்றை இந்திராவே தெரிவுசெய்யவேண்டும்'' என்று பதிலளித்தார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் நிருபர் ஒருவர், ''நிதி மந்திரிப் பொறுப்பை திரு. மொரார்ஜிக்கு நீங்கள் ஒப்படைத்தால் அவர் ஏற்றுக்கொள்வாரா'' என்று கேட்டார். ''இருக்கலாம்'' என்று திருமதி இந்திராகாந்தி பதிலளித்தார்.

துணைப்பிரதமராக நியமிக்கப்படும்திரு. மொரார்ஜி தேசாய்க்கு நிதிமந்திரிப் பதவியும் வழங்கப்படலாம் என்றும் இப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் இங்கு நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் பதவிக்குக் கடுமையான போட்டியிருந்த பொழுதிலும் அதனைச் சுமுகமாகத் தீர்த்துவைத்தது குறித்து காங்கிரஸ் தலைவர்கள் பலர் திரு. காமராஜருக்கு பாராட்டுதல் தெரிவித்துள்ளனர்.

(முன்வந்த செய்தி 3-ம் பக்கம்)

கண்டியில்

## மிகப் பெரிய நெசவாலை

நாவலப்பிட்டி, ஞாயிறு

மின்சார நெசவு ஆலையொன்றை நிறுவுவதற்கு கண்டி மாவட்டத்தில் ஐம்பது ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஐயாறன் எழுதுகிறார்

பிரதமர் டட்லி சேனநாயகா நேற்று கதிர்காமம் சென்று விசேஷ பூசையில் கலந்து கொண்டாராம். தெவிநுவர இடைத் தேர்தல் பிரசாரம் செய்யும் அவர், கதிர்காம முருகனிடம் தமதுகட்சி, தேர்தலில் வெற்றிபெற வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வாரென்பதில் சந்தேகமில்லை.

சென்ற பொதுத் தேர்தலின்போது வடமாகாணத்திலே ஒரு வேட்பாளர், பல கோவில்களுக்கும் சென்று கும்பிட்டார். வீடுவீடாகப் படியேறிக் கேட்பதைவிட, கோவில் கோவிலாகச் சென்று வழிபடுவதால், பொதுமக்களின் மனதைச் சுலபமாகக் கவரலாமென்று தோன்றியது. தேர்தலில் அவரே வென்றார்.

ஆனால் சமீபத்தில் நடைபெற இருக்கும் இடைத் தேர்தலில், ஸ்ரீமாவும் கதிர்காமம் சென்று தமது கட்சியின் வெற்றிக்காகப்பிரார்த்தனை செய்யக்கூடும். ஒரு சமயம் ஸ்ரீமா காவடிகூட எடுத்து ஆடியிருக்கிறாராம். இப்படி இரு தலைவர்களும் பிரார்த்தனை செய்தால் முருகக் கடவுள் யாருக்கு வரமளிப்பாரோ? பாவம்!

ஃ ஃ ஃ

இலங்கைப் பத்திரிகைக்காரர்களுக்கு பிரதமர் ஒரு நல்ல யோசனை கூறியிருக்கிறார். வைத்தியத் தொழில் செய்பவர்கள் தங்களுக்குள்ளாக ஒரு 'மெடிக்கல் கவுன்ஸில்' அமைத்து தங்கள் தொழில் நெறிக்கான விதிகளைத் தாங்களே அமைத்து அதன்படி நடக்கின்றனர். அதுபோல பத்திரிகைக்காரர்களும் 'பிரஸ் கவுன்ஸில்' தங்களுக்குள் அமைத்துக் கொண்டு பத்திரிகா தர்மங்களை வகுத்து அதன்படி நடக்கலாமென்றும், அப்படிச் செய்தால் அரசாங்கம் அதற்கான எல்லா உதவிகளையும் அளிக்குமென்றும் தெரிவித்தார். இந்த யோசனையை ஏற்று இலங்கையிலுள்ள பத்திரிகைக்காரர்கள் ஒரு 'பிரஸ்கவுன்ஸில்' தங்களுக்குள் அமைத்துக் காரியங்கள் செய்வார்களா?

இங்கு ஸ்ரீமா ராஜ்யத்திலே பத்திரிகைச்சட்டம் கொண்டுவரப் போவதாகப் பலமுறையும் பயமுறுத்தினர். சூரன் தலைபோல் பல பல வேடங்கள் தோன்றின. சட்டவிதிகளைப் பார்க்கும்போது, இந்தப் பேனைத் தொழிலை விட்டுவிடலாமென்று தோன்றியது. அவ்வளவு கெடுபிடி. ஆனால் நல்லவேளை, கடைசி நேரத்தில் எதிர்பாராத முறையில் ஸ்ரீமாவின் அரசாங்கம் தோற்று, சபையும் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தல் நடந்து, அதில் ஸ்ரீமா கட்சி முக்கியமாக இதே காரணத்தால் வெற்றிபெற முடியவில்லை. 'பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வைக்காதே' என்று பொதுமக்கள் தீர்ப்பளித்து, இங்கு ஜனநாயகத்தையும், பத்திரிகைக்காரர்களையும் காப்பாற்றினர்.

தேசிய அரசாங்கத்திலே சில மந்திரிகள் மீண்டும் அந்தச் சட்டத்தை வேறு உருவத்தில் கொண்டுவர முற்பட்டனர். பிரதமர் தலையிட்டு, அதைத் தடுத்துவிட்டதற்காக அவரைப் பாராட்டவேண்டும்.

இங்கு சில பத்திரிகைகள், பத்திரிகை அதிகம் விற்பதற்காகவோ அல்லது அரசியல் நோக்கத்துடனோ வகுப்புவாதத்தைக் கிளப்பிவிட்டுவருகின்றன. அவ்வி

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத்தொடர்ச்சி]

தம் செய்வது நாட்டுக்குப் பெருந்தீங்கு என்றாலும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கண்டும் காணாததுபோல் இருந்துவருகின்றது. பத்திரிகா தர்மத்தை நிலைநாட்ட ஒரு பத்திரிகைச்சபை இருப்பின், மற்றப் பத்திரிகைக்காரர்கள் இதைச் சுட்டிக்காட்டி, திருத்தப்பார்க்கலாம். இப்போது வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பிவிடுவதுதான் தேசாபிமான கைங்கரியமாகச் சிலர் கருதுகின்றார்கள். அரசாங்க உதவியுடன் ''பிரஸ் கவுன்ஸில்'' சீக்கிரம் அமைத்தால் நிலைமை சீர்திருந்தக்கூடும். எப்படியும் இங்கு ஒருபத்திரிகைச்சபை ஏற்படுவது மிக அவசியமமே. அரசாங்க ஆதிக்கமின்றி, பத்திரிகைக்காரர்களே சேர்ந்து அமைப்பது, பத்திரிகைச் சுதந்திரத்தையும், மரியாதையையும் காக்கப் பெரிதும் உதவியாக இருக்குமல்லவா?

ஃ ஃ ஃ

பல பத்திரிகைகளை ஒருவரே நடத்துவதால், பத்திரிகா சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்படாதென்றும், ஆசிரியருக்கு ''உண்மையைக் கூறவும், தேசமக்களின் மேலான நன்மைக்கானமுறையில் நடக்கவும்'' பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டால், பல பத்திரிகைகளை ஒருவரே நடத்துவதில்பாதகமேற்படாதென்றும், பிரிட்டிஷ் பத்திரிகை பிரபுவான லார்டு தாம்ஸன் புதுடில்லியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பத்திரிகை ஆசிரியருக்கு அந்த உரிமையைக் கொடுப்பது யார் கையில் இருக்கிறது? சற்றே ஏறுமாறாக இருப்பின், ஆசிரியர் கதியே என்ன ஆகும்?

பத்திரிகை வெற்றியின் ரகசியம் ''ஆசிரியர் உயிர்த்துடிப்பிலும், சொந்தக்காரர் செத்த பிணம்போல் கிடப்பதிலும்தான் அடங்கியுள்ளது'' என்று புகழ்பெற்ற ஆசிரியரான பிராங் மொரைஸ் ஒருசமயம் கூறியது நினைப்புவருகிறது.

ஃ ஃ ஃ

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

—அப்பர்சுவாமிகள்

[ஞானமும், கல்வியும், நானறிந்த வித்தையும் பஞ்சாட்சரமே. நாகூறி வழிபடுவதும் அதனையே. நல்லவழி காட்டுவதும் அத்திருமந்திரமேயாகும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர்பதவி: ஏகமனதானதெரிவுக்கு காமராஜர்

## பகீரதப் பிரயத்தனம்

## உடன்பாடு ஏற்படலாமென தலைவர்கள் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 11

**பார்லிமெண்ட் காங்கிரஸ்கட்சித் தலைவரை (இந்தியப் பிரதமரை) ஏக மனதாகத் தேர்ந்தெடுப்பதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. குமாரசுவாமி காமராஜர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளார். இன்று காலையில் திரு. காமராஜர் நிருபர்களிடம் தெரிவிக்கையில், பிரதமர் பதவிக்குப் போட்டியொன்றைத் தவிர்ப்பதில் முன்னேற்றம் கண்டிருப்பதாகக் கூறினர்.**

பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சித் தலைவரை ஒருமனதாகத் தெரிவு செய்வதில் இன்று நண்பகல்வரை தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர் இன்றுகாலை திரு. மொரார்ஜி தேசாயை மீண்டும்சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

### நள்ளிரவு பேச்சுக்கள்

திரு. கு. காமராஜரின்இல்லத்தில் நேற்று நள்ளிரவு வரை பேச்சுகள் நடைபெற்றன. இப்பேச்சுக்களில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, வை. பி. சவான், சர்தார் சுவர்ண்சிங், திரு. ஜகஜீவன்ராம் உட்பட ராஜ்ய முதன்மந்திரிகள் சிலரும் மற்றும் சிலசிரேஷ்ட காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் திருமதி இந்திரா காந்தியும் திரு. மொரார்ஜிதேசாயும் இரண்டு தடவைகள் சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இவ்விருவரையும் காமராஜர் தனித்தனியாகச் சந்தித்தார்.

### காமராஜர் நம்பிக்கை

பிரதமரை ஏகமனதாகத் தெரிவு செய்வது சம்பந்தமாக நேற்று முழுவதும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிப் பல கூட்டங்களை நடத்தியது. கட்சியின் உயர் தலைவர்கள் நேற்றுத் தனித்தனியாகவும், சேர்ந்தும் ஆலோசனை நடத்தினர். நேற்று நள்ளிரவு காமராஜரின் இல்லத்தில் கடைசிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய



மான தலைவர்கள் கலந்து கொண்டனர். திரு. தேசாய் சமுகமளிக்கவில்லை. இக்கூட்டத்தின் பின்னர் திரு. காமராஜர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில், போட்டியைத் தவிர்க்கக்கூடிய அறிகுறிகள் இப்பொழுது காணப்படுவதாகக் கூறினர்.

திரு. ஜகஜீவன்ராம் கருத்து வெளியிடுகையில் ''உடன்பாடு ஏற்படலாம்'' என்று நம்பிக்கை வெளியிட்டார்.

### உடன்பாடு ஏற்படுமா?

இன்றுகாலைவரை வெளியான செய்திகள், பிரதமரை ஏகமனதாகத் தெரிவு செய்வதில் கடைசி நேரத்தில் உடன்பாடு ஏற்படலாம் என்பதையே வலியுறுத்தின. திரு. மொரார்ஜி தேசாயின் கோரிக்கையொன்றுக்கு திரு. காமராஜர் இணக்கம் தெரிவிப்பதன்மூலம் இது சாத்தியமாகலாம் என்று காமராஜருடன் நெருங்கிய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. ஆனல் அதன் விபரம் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

### இந்திரா எதிர்ப்பும் தேசாய் விருப்பமும்

திருமதி இந்திரா காந்தி மீண்டும் பிரதமராகும்பட்சத்தில் தமக்கு உதவிப் பிரதமர் அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்று திரு. மொரார்ஜி தேசாய் கோருகிறர். ஆனல் தமது மந்திரிசபையில் தமக்கு அடுத்த ஸ்தானத்தை வழங்க பிரதமர் இந்திரா தயாராக இருந்தபோதிலும் உதவிப் பிரதமர் என்ற அந்தஸ்தை திரு. மொரார்ஜி தேசாய்க்கு வழங்க திருமதி இந்திரா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். உதவிப் பிரதமராகவும் உள்துறை மந்திரியாகவும் தாம் நியமிக்கப்படவேண்டுமென்பது திரு. மொரார்ஜி தேசாயின் கோரிக்கை. ஆனல் இவை இரண்டுக்கும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார்.

---

## எம்.ஜி. ராமச்சந்திரன் வீடு திரும்பினர்

சென்னை, மார்ச் 11

திரைப்பட நடிகரும், தமிழ்நாடு சட்டசபை அங்கத்தவருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றிரவு சென்னை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்



கடந்த ஜனவரி மாதம் திரு. ராமச்சந்திரன் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சென்னை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இச்சம்பவத்தின்போது தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டதாகக் கூறப்பட்ட திரு. எம். ஆர். ராதாவும் சென்னை ஆஸ்பத்திரியில் வேருெரு 'வார்ட்'டில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

திரு. எம். ஜி. ராமச்சந்திரனை துப்பாக்கியால் சுட்டதாகக் குற்றஞ்சாட்டி திரு. ராதாமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும், திரு. ராதாவைப் பிணையில் விட மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருப்பதும் வாசகர்கள் அறிந்ததே.

திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளார். இவர் தமிழ்நாடு சட்டசபைக்கு பரங்கிமலைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருநதார்.

---

## ''இந்தியாவின் ஒற்றுமையை வலுப்படுத்துவேன்'' -- நம்பூதிரிபாத்

திருவனந்தபுரம், மார்ச் 11

கேரள முதன் மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் நேற்று வெளியிட்ட வானொலிச்செய்தியில், இந்தியாவின் ஒற்றுமையை வலுப்படுத்துவதும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண்பதுமே தமது முயற்சிகளாகவிருக்குமென்று கூறியுள்ளார்.

''ராஜ்ய அரசாங்கங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையே கூடிய ஒத்துழைப்பு இருக்கவேண்டும். இதனை ஏற்படுத்துவதில் ராஜ்ய அரசாங்கம் மட்டுமின்றி மத்தியஅரசாங்கமும் அதிக கவனம் செலுத்தவேண்டும். கேரளத்தைப் பொறுத்த மட்டில் இந்த ராஜ்யம் பிராந்திய ஏற்றத் தாழ்வினல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மாறவேண்டும். ராஜ்யங்களிடையே அதிகமான ஒத்துழைப்பு ஏற்படுவதற்குநான் அதிகம் முயற்சிப்பேன்', என்றும் திரு. நம்பூதிரிபாத்தெரிவித்துள்ளார்.

---

## காங்கிரஸ் - எதிர்க் கட்சிகள் முதன்மந்திரிகள் விபரம்

புதுடில்லி, மார்ச் 11

இந்தியாவில் இதுவரை காங்கிரஸ் ஆட்சி அமைத்துள்ள ராஜ்யங்களும் எதிர்க் கட்சிகளின் ஆட்சி அமைத்திருக்கும் ராஜ்யங்களும் அவற்றின் முதன் மந்திரிகளும் வருமாறு:

இதுவரை ஐந்து ராஜ்யங்களில் எதிர்க்கட்சிகள் மந்திரிசபை நிறுவியுள்ளன.

[1] மேற்கு வங்காளம்—முதன்மந்திரி அஜாய் குமார் முகர்ஜி [போட்டி காங்கிரஸ்], [2] தமிழ்நாடு—ஸி என். அண்ணுதுரை [தி. மு. க.], [3] கேரளா—ஈ எம். எஸ். நம்பூதிரிபாத் [இடதுசாரி கம்யூனிஸ்ட்], [4] ஒரிஸா—சிங்தேவ் [சுதந்திரா]. [5] பிகார்—மகேஷ் பிரசாத் சின்கா [சோஷலிஸ்ட்].

காங்கிரஸ் மந்திரி சபை அமைத்துள்ளராஜ்யங்களும் முதன் மந்திரிகளும்.

[1] பம்பாய்—நாயக், [2] மைசூர்—நிஜலிங்கப்பா, [3] ஆந்திரப்பிரதேசம்—பிரமானந்தரெட்டி, [4] குஜராத்—ஹிரேந்திர தேசாய், [5] மத்தியப்பிரதேசம்—மிஸ்ரா, [6] ஹரியானு—பகவத்தயாள் சர்மா.

---

## மா-சே-துங் மீது பிரஸ்னேவ் கடும் 'தாக்கு'

மாஸ்கோ, மார்ச் 11

சீனவில் திரு. மா-சே துங் தனது இராணுவத்தினருடன் சேர்ந்து கம்யூனிஸத்தைக் கவிழ்க்க முயற்சிக்கின்றார், என்று ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவ் தெரிவித்துள்ளார்.

பிராந்திய பார்லிமெண்ட் தேர்தல்கள் சம்பந்தமாக கிரெம்ளினில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தான் திரு. பிரஸ்னேவ் மேற்கண்டவாறு கண்டித்தார்.

''சீனவில் இப்பொழுது நடைபெறுவது பிற்போக்கு இராணுவத்திடீர்ப் புரட்சி'' என்று குறிப்பிட்ட திரு. பிரஸ்னேவ், ''ரஷ்ய எதிர்ப்புக் கொள்கைகளில்மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளையும் சீன மிஞ்சிவிட்டது'' என்று தெரிவித்தார்.

திரு. மா-சே-துங்கையும் சீனக்கொள்கைகளையும் திரு. பிரஸ்னேவ் கடுமையாகத் தாக்கியது இதுவே முதற்தடவை எனக் கூறப்பட்டது.

---

## சுகர்ணேவைபதவி நீக்குமாறு காங்கிரஸ் கமிட்டி சிபார்சு

ஜாகர்த்தா, மார்ச் 11

இந்தோனேஷிய அதிபர் பதவி உள்ளிட்டு சகல அதிகாரங்களையும் டாக்டர் சுகர்ணேவிடமிருந்து களைந்து விடுமாறு இந்தோனேஷிய மக்கள் ஆலோசனை காங்கிரஸின் விசேஷகமிட்டி சிபார்சு செய்துள்ளது.

டாக்டர் சுகர்ணேவிடமிருந்து இந்த அதிகாரங்களைப் பறிக்கும் பொழுது இராணுவத்தினரின் எதிர்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டாமென்றும் இக் கமிட்டி கோரியுள்ளது.

அதிபர் பதவியிலிருந்து டாக்டர் சுகர்ணேவை அகற்றுவதை இராணுவத்திலுள்ள ஒரு பிரிவினர் எதிர்க்கின்றனர் என்று இராணுவத் தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோ முன்னர் தெரிவித்திருந்தார்.

விசேஷ கமிட்டியின் சிபார்சுகளை மக்கள் ஆலோசனைக் காங்கிரஸ் ஆராயும் அதே சமயத்தில், அதன் சிபார்சுகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளுமென்று இங்கு கூறப்பட்டது.

---

## மார்ஷல் மலினேவ்ஸ்கி ஆஸ்பத்திரியில் சிகிச்சை

மாஸ்கோ, மார்ச் 11

ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேவ்ஸ்கிஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

அறுபத்தியெட்டு வயதான அவர் புறறுநோயினல் மிகவும் கஷ்டப்படுவதாக ஒரு செய்தி கூறியது.

கடந்த சில மாதங்களாக மார்ஷல் மலினேவ்ஸ்கியின் நடமாட்டங்கள் மாஸ்கோவில் காணப்படாததைத் தொடர்ந்து அவர் காலமானதாக வதந்திகள் உலாவின. ஆனல் இவ்வதந்திகளை அரசாங்கம் மறுத்துள்ளது.

---

## விமான விபத்து: 25 பேர் பலி

சைகோன், மார்ச் 11

அமெரிக்க கடற்படை விமானமொன்று நேற்று விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 25 பேரும் மாண்டனர். இச்சம்பவம் சைகோனிலிருந்து 120மைல் தூரத்தில் நிகழ்ந்தது.

---

## இன்று பிரதமர் தெரிவு

இந்தியப் பிரதமர் தெரிவு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் தலைவராக நியமிக்கப்படுபவர் இந்தியப் பிரதமரா்வார்.

---

## ஜெய்ப்பூரில் அமைதி

ஜெய்ப்பூர், மார்ச் 11

ஜெய்ப்பூரில் நேற்று முழுநாளும் அமைதி நிலவியது. கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களுக்காக ராஜஸ்தான் அரசாங்கம் ரூ. 16,000 வழங்கியுள்ளது.

முதன்மந்திரி மோகன்லால் சுகாடியா நேற்று ஜெய்ப்பூர் திரும்பினர்.

---

## காயத்திரிதேவி கோரிக்கை

ஜெய்ப்பூர், மார்ச் 11

ஜெய்ப்பூர் [illegible] துப்பாக்கிப்பிரயோகம் சம்பந்தமாக நீதிபரிபாலன விசாரணை நடைபெறவேண்டுமென்று ஜெய்ப்பூர் மகாராணி காயத்திரிதேவி [லோகசபை அங்கத்தவர்] கோரியுள்ளார். மாஜிஸ்திரேட் விசாரணையில் இவர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முற்போக்குசக்திகளுடன் சேருங்கள்'

## சமசமாஜ கூட்டத்தில் தனபால வீரசேகரா

சுழிபுரம், சனி

''இந்தநாட்டில் வாழும் சகலமக்களும் சுபிட்சமாக வாழ்வதற்கு ஏற்றஅரசு ஒரு சோஷலிச முற்போக்கரசாகும். சிறுபான்மையோரின் சம்மதம் இன்றி பெரும்பான்மையோரும், பெரும்பான்மையோரின் உதவியின்றி சிறுபான்மையோரும் இந்நாட்டில் சிறப்பாக அரசாட்சி செய்யமுடியாது. ஆகவே இந்நாட்டின் நலன் கருதி தமிழ்பேசும் மக்கள் தென்னிலங்கையிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும். அப்போது தான் இந்தநாட்டு மக்கள் சகல சிறப்பும் மிக்கவர்களாக வாழலாம்'' என சுழிபுரம் சமசமாஜ வாலிபமுன்னணியினரால் வழக்கம்பரை அம்மன்கோவிலுக்கு அருகாமையில் அரிசி, உப உணவுப்பொருள்களின் தட்டுப்பாட்டை ஆட்சேபித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெஹியோவித்த பாராளுமன்றப் பிரதிநிதி திரு. தனபால வீரசேகரா குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது— இன்று ஏழுகட்சியின் தேசியஅரசிலுள்ள மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் ஊழல்கள் நிறைந்தவர்களாகவும், லஞ்சம் வாங்கும் பேர்களாகவும் விளங்குகின்றார்கள். நான் இதைப் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தினேன். குற்றம் உள்ளதால் என்மேல் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றார்கள். வகுப்புவாத வெறியர்கள் நிறைந்த யு. என். பி. கும்பல்கள் இந்த நாட்டின் அழிவையே தமது இலட்சியமாகக் கொண்டுள்ளார்கள் என்பது தற்போதுநடைபெறும் ஒவ்வோர் செயல்மூலமும் காணமுடிகின்றது. தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் ஓர் சந்தர்ப்பவாதிகளாக விளங்குகின்றார்கள். சந்தர்ப்பவாதம்பேசும் தமிழரசாரின் இரட்டைவேடம் என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். இந்நாட்டில் ஏற்பட்டுள்ள சகல பிரச்னைகளையும் தீர்க்க தென்னிலங்கையிலுள்ள மக்கள் சக்தியுடன் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென வேண்டுகிறேன்.

திரு. அ. விசுவநாதன் பேசுகையில், 'கடந்தகாலத்தில் தமிழ்பேசும் மக்கள், தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு ஆகிய இரு கட்சிகளும் காட்டியபாதை தப்பானது என்பதை நன்கு தெரிந்துள்ளார்கள். மீண்டும் தப்பான பாதையில் செல்லாமல் முன்னேற்றப் பாதையில் செல்லத் தமிழ்மக்கள் தயாராகவேண்டும்'' என்று கூறினார்.

சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம், திருவாளர்கள் வி. பாலசிங்கம், எஸ். நடராசா ஆகியோரும் பேசினார்கள்.

## இளைஞன் கொலை; மூவர் ரிமாண்டில்

மாவிட்டபுரம், சனி

பளை வீமன்காமத்தைச் சேர்ந்த முத்தையா விமலச்சந்திரன் என்னும்[26வயது] இளைஞன் அடித்துக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகக் காங்கேசன்துறைப் பொலிஸார் மூவருக்கெதிராக நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கில் பளை வீமன் காமத்தைச் சேர்ந்தவர்களான செல்லையா விஜயரத்தினம் [17], செல்லையாகந்தசாமி [26], தம்பிப்பிள்ளை கமலநாதன் [13]ஆகிய மூவரும் சென்ற மாதம் 23-ம் திகதி அதேயிடத்தைச் சேர்ந்த முத்தையா விமலச்சந்திரன் என்னும் [26 வயது] இளைஞனை அடித்துக் கொலை செய்ததாக காங்கேசன் துறைப் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ் நிற்சிங்கா முன்னிலையில் நேற்று முன்தினம் குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப் பட்டதைத் தொடர்ந்து காங்கேசன்துறைப்பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி நீதிமன்றத்தில் இரத்தக் கறையுடன் கூடிய ஒரு கதவுத் தாழ்ப்பாளைச்சமர்ப்பித்து அதை அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிடும்படி விண்ணப்பித்தார். நீதிபதி தாழ்ப்பாளை அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிட்டு வழக்கைவிசாரணைக்காக இம்மாதம் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்து அத்திகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## பாவனையாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

ஆனைப்பந்தி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சாமான் வாங்கவரும் பாவனையாளர்களை, சில்லறை கொண்டு வரும்படி மனேஜர் கட்டாயப்படுத்துவதாக தெரியவருகிறது. இதனால் சில பாவனையாளர்கள் சாமான் வாங்காமலே திரும்பிச் செல்கின்றனராம்.

கடையில் வாங்கும் பொருட்களுக்கு உரிய பணத்தைக் கொடுக்காவிடில் மனேஜர் பொருட்களை பாவனையாளர்களுக்குக் கொடுக்க மறுப்பதாகவும் இதனால் பாவனையாளர்கள் பெரும் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அயலவர் மரணத்துக்கு

## அனுதாபம்தெரிவித்தவர் ஐந்துநிமிடத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தனது அயலவர் ஒருவரின் மரணம் குறித்து அனுதாபப்பட்டு துக்கம் தெரிவித்த ஒருவர் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததால் ஸ்தலத்திலேயே மரணமானார். இச்சம்பவம் கோப்பாய் தெற்கு இருபாலையில் நடைபெற்றது. காலஞ்சென்ற கதிரவன் செல்லரின் [55 வயது] மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவர் ஒரு கள்ளிறக்கும் தொழிலாளியெனவும், சம்பவம் நடந்த தினத்தன்று காலை பத்து மணியளவில் காலஞ்சென்றவர் தென்னைமரத்தில் கள்ளிறக்குவதற்கு ஏற முன்னர், அன்று மரணமான அவரது அயலவர் ஒருவரின் மரணம் பற்றித்துக்கம்தெரிவித்ததாகவும் ஆனால் மரத்திலேறிய சில நிமிடங்களில் அவர் கைதவறி நிலத்தில் வீழ்ந்ததாகவும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் மரணமடைந்துவிட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காலஞ்சென்றவரது மருமகனான தம்பையா, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் கே. சோமசுந்தரராஜா ஆகியோரும் சாட்சியமளித்தபின்னர் விபத்து மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

(ந. நி.)

# செய்திச் சுருக்கம்

### விவசாயிகட்கு உதவிப்பணம்

பூநகரி, சனி

பூநகரி மட்டுவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் விவசாயிகளுக்கு களை பிடுங்குவதற்கென ஒதுக்கப்பட்டபணம்இப்போதுவழங்கப்பட்டு வருகின்றது. ஒரு ஏக்கருக்கு 25 ரூபாவீதம்ஒருவருக்கு மூன்று ஏக்கருக்கு மட்டும் பணம் வழங்கப்படுகின்றது.

### திறப்புவிழா

சுழிபுரம், சனி

தொல்புரம் பாணவெட்டி அரசினர் வைத்தியசாலையை இம்மாதம் 15ம் திகதி சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன திறந்து வைக்கவிருக்கிறார்.

### விபத்து

கோண்டாவில், சனி

புன்னாலைக்கட்டுவனிலிருந்து யாழ்ப்பாண நகரை நோக்கிச்சென்ற லொறியும் கோண்டாவிலிலிருந்து இருபாலை வீதிவழியாக நுணுவில் நோக்கிச்சென்ற வண்டிலும் கோண்டாவில் பலாலி வீதிச் சந்தியில் மோதுண்டதால் வண்டியின் ஒருபக்க சில் சுக்குநூறாகியது. வண்டில் சாரதியும் வண்டிலுள் இருந்த 10வயதுச் சிறுவனும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர்.

### இறங்குதுறைமுக வேலை ஆரம்பம்

பலாலி, சனி

காங்கேசன்துறை இறங்குதுறைமுகம் இயங்குவதற்கான ஆரம்ப வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன. இவ்வேலையை அரசாங்க என்ஜினியரிங்கார்ப்பரேஷன் பொறுப்பேற்றுள்ளது. இங்கு இவ்வேலைகள் நடைபெறுவதால் பருத்தித்துறைத் துறைமுகத்துக்குக் கப்பல்கள் அனுப்பப்படுமென அறியப்படுகிறது.

### விவசாயப்போட்டி

சங்கானை, சனி

சங்கானையில் விவசாயப் போட்டியொன்றை நடத்த பொலிஸ் பகுதியினர் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். பாடசாலை மாணவர்களும் இப்போட்டியில் பங்குபற்றக்கூடியதாக போட்டி விதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

ஆரியமுத்து திருச்செல்வம்என்பவர் ஓட்டிச்சென்ற லொறியினால் பருத்தித்துறை—யாழ்ப்பாணம் வீதியில் புருப்பொறுக்கி எனுமிடத்தில் சுந்தரம் அமிர்தலிங்கம் என்ற சிறுவனை மோதிக்காயம் விளைவித்ததாகப் பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ஆர். இளையபெருமா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது எதிரியைக்குற்றவாளியாகக் கண்டு அவருக்கு மாஜிஸ்டிரேட் ரூ. 50 அபராதம் விதித்தார்.

### இலட்சார்ச்சனை

சுழிபுரம், சனி

சுழிபுரம் பருளாய் சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் இலட்சார்ச்சனை நாளை [illegible] வரை நடைபெறவிருக்கின்றது.

### நோயாளர் கஷ்டம்

காரைநகர், சனி

காரைநகரில் ஒரு தரமான ஆஸ்பத்திரி இல்லாமையால் இங்குள்ள நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது. இங்குள்ள நோயாளர்கள் இதனால் வெளி ஊர்களுக்குச் சென்று சிகிச்சைபெற வேண்டியிருக்கிறது.

### படகுசேவை பாதிப்பு

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவு மோட்டார் சேவை மீண்டும்பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நெடுந்தீவு பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தபால் விநியோகமும் இதனால் பெரிதும் தடைப்பட்டுள்ளது.

### மாதர் முன்னேற்றச் சங்கம்

வவனியா, சனி

'ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் நாட்டிலுள்ள பெண்கள் விழிப்புணர்ச்சி கொண்டு உழைக்க முன்வர வேண்டும்' என தெற்கு இலுப்பைக்குளத்தில் நடைபெற்ற மாதர் கிராமமுன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசிய வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கிராமமுன்னேற்ற உத்தியோகத்தர் திரு. ஏ. விஜயநாதன் கூறினார்.

இப்போது ஏற்பட்டுள்ள உணவுநெருக்கடியைத் தீர்ப்பதில் பெண்கள் தம்மாலான ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# 'தி. மு. க. தலைவர்களை தமிழரசு அழைத்துள்ளது'

## சிங்களவருக்கு ஆபத்து என சிறிமா அறிவிப்பு

மாத்தறை, சனி

''தெவிநுவர உபதேர்தல், எமது சரித்திரத்தின் முக்கியமான ஒரு கட்டத்தில் நடைபெறுகிறது. தென் இந்தியாவில் அரசமைத்துள்ள தி. மு. க. வுக்கு இலங்கையைப் பற்றிச் சொந்தமான எண்ணங்கள் உண்டு. தமிழரசுத் தலைவர்கள் ஏற்கனவே அண்ணாதுரையையும், மற்றும் தி. மு. க. தலைவர்களையும் இலங்கைக்கு விஜயம்செய்ய அழைத்துள்ளனர். ஆகவே சிங்களவர்களாகிய நாங்கள் எமது பேதங்களையெல்லாம் மறந்து சிங்கள மக்களை எதிர்நோக்கும் ஆபத்தைத் தவிர்க்கும்வகையில் செயலாற்றவேண்டும்.''

இவ்வாறு தெவிநுவர உபதேர்தலில் போட்டியிடும் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. ரொனி டி மெல்லை ஆதரிக்குமுகமாக கப்புகம என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயகா கூறினார்.

திரு. தொண்டமானே இன்று அரசாங்கத்தின் மீது அதிகாரம் செலுத்துவதாகவும், தமிழ்க் கோரிக்கைகள் தரப்படாவிட்டால், அரசாங்கத்தைமுறியடிப்பதாக அவர் பயமுறுத்தியிருப்பதாகவும், தி. மு. க. அதிகாரத்துக்கு வந்துள்ள நேரத்தில், தாம் நினைத்தபடி செய்யும் நோக்கத்துடன், மாவட்டசபைகளை அளிக்குமாறு தேசியஅரசாங்கத்தை அவர் நெருக்கி வருவதாகவும் திருமதி பண்டாரநாயகா மேலும் கூறினார்.

தமிழரசின் பாட்டுக்குத் தேசியஅரசாங்கத்தைத் தாளம்போட அனுமதித்தால், விரைவில் சிங்களவர் தமிழர்களுக்கு அடிமைகளாகிவிடுவரென்றும், ஆகவே, தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில் மக்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் திருமதி சிறிமா கேட்டுக்கொண்டார்.

## தொழில்நுட்பபாடசாலை மாணவர் தெரிவு

உடுவில், சனி

இலங்கை பூராவிலும் உள்ள அரசாங்க தொழில்நுட்ப பாடசாலைகளில் கழக ஆண்டு 1967—68க்கு வேண்டிய மாணவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான புகுமுகப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்னர் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைப் பகுதியினருக்கு அனுப்பப்படல்வேண்டும். ஏப்ரல் மாதத்தில் இப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலவச இரத்ததானம்

### அதிகாரி பாராட்டு

உடுவில், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலை மாணவர்கள் இவ்வருடத்தில் மூன்றாவது முறையாக நேற்று இரத்ததானம் செய்தனர். இரத்ததானம் செய்பவர்களுக்கு உபகாரப்பணமாகக் கொடுக்கப்படும் ஒரு தொகையை பல மாணவர்கள் ஏற்காதுவிட்டது குறித்து இரத்தவங்கி அதிகாரி அதிசயப்பட்டார். 'உண்மையான சமூகத் தொண்டர்களை தொழில்நுட்ப பாடசாலை வளர்த்து வருவதுகுறித்து பெருமைப்படுகிறேன்' என்று அவர் கூறினார்.

## ஜி. ஜி. க்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகத்தை ஆதரித்துப் பேசியதற்காகவும் வாக்களித்ததற்காகவும் எருக்கலம்பிட்டி கிராமசபைத் தலைவர் ஜனாப் கே. எம். ஏ. றஹீம் தமிழ்க்காங்கிரஸ்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு பாராட்டுத் தெரிவித்துத் தந்தியொன்று அனுப்பியுள்ளார். இது சம்பந்தமாக மேலும் பல கிழக்கிலங்கை, தென்னிலங்கையைச்சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களும் முஸ்லிம் சங்கங்களும் திரு. பொன்னம்பலத்துக்குப் பாராட்டுத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளனர். (ந.நி.)

உடுவில், சனி

கந்தரோடை நாதம்பிரான் ஆலயத்தில் வெளி மண்டபம் ஒன்று, கந்தரோடை சைவப்பெருமக்களால் பெரிய அளவில் சிரமதானமூலம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இக்கோவில் வருடாந்த பொங்கல் பண்டிகை இம்மாதம் 13-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்று விசேஷபூசை, ஆராதனைகளும், அன்னதானமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்விப்பத்திரம்

பின்வரும் பொருட்களை கோப்பாய் வடக்கு ஐக்கிய பண்டசாலை புதிய கட்டிட வேலைத்தலத்தில் விநியோகம்செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

சல்லி 2'' [உடைசல்லி], கிறேஸர் சல்லி 3/4'', செம்பாட்டு மண், கண்டாவளை மணல், மண்கும்பான் மணல், 6'' X 9'' கல், 4'' X 6'' கல்.

இப் பொருட்களின் கேள்விப்பத்திர விகிதம் ஒரு கியூப்புக்குஇருக்கவேண்டும். விண்ணப்பப்பத்திரங்களை 21-3-67க் கிடையில் தலைவர், வலி. கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம், நீர்வேலி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

க. வீ. கனகசபாபதி
2478 தலைவர்

### நோயாளர் கஷ்டம்

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் ஊசிமருந்துவகைகள், குளிகை மருந்துகள் இல்லாமல் ஏழை நோயாளிகள் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர்.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ரஞ்சன்
நடித்த
**மாயவீரன்**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
போயா தினங்களில்
4 காட்சிகள்
ரி. எஸ். பகவதி— ஜெயஸ்ரீ
**சம்பூரண மகாபாரதம்**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.—விஜயா
நடித்த
**தொழிலாளி**

REGAL - JAFFNA
NOW SHOWING
Tippi Hedren
Sean Connery
in
MARNIE


# இராணுவக் கோஷ்டியிடம் யாழ்ப்பாணம் தோல்வி

யாழ்ப்பாணம், சனி

இலங்கை இராணுவ உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் இராணுவத்தினர் கோஷ்டி யாழ். தெரிவுக் கோஷ்டியை தோற்கடித்தது.

இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகவே காணப்பட்டது. விளையாட்டைப் பொறுத்தமட்டில் இரு கோஷ்டி வீரர்களும் சிறப்பாக விளையாடினர். இடைவேளையின்போது இருகோஷ்டிகளும் தலா ஒரு கோல் பெற்றிருந்தன. இடைவேளைக்குப்பின் இராணுவக் கோஷ்டி இரு கோல்களும், யாழ்.கோஷ்டி ஒரு கோலும் பெற்றன. யாழ். கோஷ்டியின் இடதுகரைவீரர் தேவராசா, மத்திய முன்னணி வீரர் மரியநாயகம் ஆகியோர் சிறப்பாக விளையாடினர். இராணுவக் கோஷ்டியில் கோல்காப்பாளரும், வலது முன்னணி வீரரும் பாராட்டுக்குரியவர்கள்.

இப்போட்டி முடிவில் இராணுவத்தினர் 3-2கோல்களால் யாழ். கோஷ்டியை வென்றனர். யாழ். விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது.

## இனிங்ஸ்வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மத்தியகல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்தியகல்லூரி இனிங்ஸாலும் 25 ஓட்டங்களினாலும் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் துடுப்பெடுத்தாடிய புரட்சிதாசன் ஏபிரகாம் ஆகியோரின் விளையாட்டு, வெற்றிக்குக் காரணமாகவிருந்தது. இப்போட்டி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கண்டி சென். சில்வஸ்டர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில்சென்.ஜோன்ஸ் ஒரு இனிங்ஸ் 21 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது. இப்போட்டி கண்டி சென். சில்வஸ்டர் மைதானத்தில் நடைபெற்றது.

## வானொலி நிகழ்ச்சிகள்

**ஞாயிறு 12 - 3 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல் — கே. இந்திராதேவி, 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.

## 'இலவசஅரிசியும் ,க்கப்படலாம்'

--உதவிமந்திரி

ஹிக்கடுவ, சனி

'அரிசி உற்பத்தி செய்யும் நாடுகளில் நிலவும் கடுமையான பற்றுக்குறையும், மற்றும் உள்நாட்டுப் பிரச்னைகளும் இப்போது இலவசமாக அளிக்கப்படும் ஒருகொத்து அரிசியையும் நிறுத்தவேண்டி ஏற்படுத்தக் கூடும். தமது அரசியல் நம்பிக்கைகள் எதுவாயிருந்தாலும் ஒவ்வொருவரும் ஒற்றுமையாகநாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு ஹிக்கடுவ திராநாகமபோதிராஜ வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், காணி, நீர்ப்பாசன, மின்சக்தி உதவிமந்திரி திரு. பி ஸி. இம்புலாஹகூறினார்.

## கடைச்சிப்பந்திகள் சங்கம்

முல்லைத்திவு, ஞாயிறு

முல்லைத்தீவிலுள்ளகடைச்சிப்பந்திகள் ஒன்று கூடி தங்கள் நலன்களைப் பாதுகாக்க ஒரு சங்கத்தை நிறுவியுள்ளனர். இச்சங்கத்தில் தலைவராக திரு. சு. பொன்னுசுவாமி தெரிவு செய்யப்பட்டார்.

கூட்டத்தின்போது தலைவர் பேசுகையில் கடைச்சிப்பந்திகள் தங்கள் முதலாளிகளுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்து தங்கள் உரிமைகளைப் பெறவேண்டும் என்றும் ஒன்று கூடி ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

புதுவருட உத்தியோகஸ்தர்கள் வருமாறு: தலைவர்: சு. பொன்னுசாமி, செயலாளர். வி. துரைரத்தினம், தனதிகாரி. வே. முருகேசு. ஆறுபேரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## ஆலய பரிபாலன சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்வேலி கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையின் கூட்டம் திரு. செ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது, புதிய ஆலய தர்மகர்த்தாக்களாக திருவாளர்கள் செ. பொன்னம்பலம், க. ஆறுமுகம், பி. எம். நடராசா ஆகிய மூவரும்நியமிக்கப்பட்டுள்ளனர். திருவாளர்கள் பி. தம்பையா. எஸ். தம்பிமுத்து, ஏ. கணபதிப்பிள்ளை ஆகியோர் ஏற்கனவே ஆலய தர்மகர்த்தாக்களாகவுள்ளனர். புதிய கூட்டத்தில் 32 பேர் கொண்ட புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி
நீராவியடி பிரவுண் ரோட்டில் நாவலர் வீதி-பிரவுண் ரோட் சந்திக்கு அண்மையில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S. சோமசுந்தரம் இல: 9, பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 1615

புத்தகம்
இங்கிலிஷ் பாஷையை மூன்றே மாதத்தில் கற்றுக் கொள்ள தமிழில் வகுக்கப்பட்ட நூல். Re 1/- Gnanaraj, P. O. Box: 357, Colombo. 1618

ரேப்றெக்கோடர்:
குறுண்டிக் ரேப்றைக்கோடர் ரி. கே. 23 எல் ஒட்ட மற்றிக் நான்கு ருய்க் புதிது விற்பனைக்குண்டு. செ.பாலச்சந்திரன் கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 1617

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### தேவை

வெல்டிங் [Gas And Electric] கம்மாலை கடைச்சல் வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் உடனே தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 29-3-67. விளம்பர இல: 1613, ஈழநாடு மே/பா என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1613


# உபஉணவு உற்பத்தியில் ஈடுபடுமாறு வேண்டுகோள்

உடுவில், சனி

''அரசாங்கம் உத்தரவாத விலைகொடுக்கும் உப உணவுப்பொருட்களை, விசேஷமாக மிளகாய். பம்பாய் வெங்காயம், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு, பயறு, நிலக்கடலை ஆகியபயிர்களை வடமாகாணமக்கள் பெருந்தொகையாக உற்பத்திசெய்தால் முற்காலத்தில் இப்பகுதிக்குபிறஇட முயற்சிகளால் கிடைத்த செல்வத்திலும் பார்க்க பலமடங்கு கூடிய செல்வம் வந்தடைவது உறுதி''

இணுவில் கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்ற உணவுற்பத்திப் பிரசாரக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசிய வலிகாமம் வடக்ருக் காரியாதிகாரி திரு தி, முருகேசபிள்ளைஇவ்வாறு கூறினர்.

உடுவில்தொகுதி நாடாளுமன்ற பிரதிநிதி திரு. வி, தருமலிங்கம் பேசியதாவது-

''தமிழ் இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாற்றமடையாமல் கமத்தொழிலில் உடனடியாகஈடுபட்டு நாட்டை பாதுகாக்க வேண்டும். அரசாங்க ஊதியத்திலும்பார்க்க கமத்தொழிலால் அதிக ஊதியம் பெறலாம். இதற்கு ஆதரவு கொடுப்பது நாட்டுப்பற்றுடைய ஒவ்வொரு பிரஜையின் முதற்கடமையாகும்,''

உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் பேசுகையில், கமக்காரப் பெருமக்களை உணவுற்பத்தி இயக்கத்தில் அமோகமாகப் பங்குபற்றும்படி கோரியதோடு, குடும்பக்கட்டுப் பாட்டுததிட்டத்தை இங்கு வாழும் மக்கள் கடைப்பிடித்து, அரசாங்கத்திற்குஉதவி புரியவேண்டும்என்றூர். மற்றும் பலரும்பேசினர்.

# மலைநாட்டுத் தமிழர் பற்றி ஜி. ஜி.

யாழ்ப்பாணம், சனி

'1948ம் ஆண்டு மலைநாட்டுத்தமிழர் பிரச்னையில்நான் எடுத்த முடிவு எவ்வளவு தூரம் முற்றிலும் நேர்மையானதுஎன்பதையும், அதில் எவ்வளவு உண்மையுள்ளது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம.'

திருநெல்வேலி சந்தியில் நேற்று முன்தினமிரவு நடந்த வரவேற்புக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம்.பி. திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர். திருநெல்வேலிகிருஷிகப்பண்ணை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் இக் கூட்டம் நடந்தது.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது;- முஸ்லிம்களுக்கான கலாச்சார பல்கலைக்கழகம்அமைக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் நான் ஆமோதித்து வாக்களித்த போது, தமிழ் எம்.பி.க்கள் சிலர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. முஸ்லிம்மக்களில் அக்கறை கொண்ட [illegible]

இந்துசமயப் பெரியார்களான சேர் பொன். இராமநாதன், மழவராயர், நாவலர் ஆகியோர் விட்டுச் சென்ற நூறுலட்சம் ரூபாவில் ஓர் இந்துப்பல்கலைக் கழகம்அமைக்கநான் எடுத்துவரும் முயற்சிகளை சிலர்இன்றும் எதிர்த்துக்கொண்டிருப்பது வருந்தக் கூடியது.

மேல்நாடுகளைப்போல் இங்கும் ஒவ்வொரு தொழிற்சங்கங்களும், தங்களுக்குள்ளேயேஒருதலைவனை தெரிவு செய்யவேண்டும். அப்பொழுதுதான் தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைய முடியும்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறியதாவது: எமது உரிமைகளைப் பெறவும், சுபீட்சமாக வாழவும் எமக்குள் ஒற்றுமைஅவசியம். கடந்த தேர்தலுக்கு முன் ஒற்றுமைப்பட்டு தமிழர் ஒரேகுரல்எழுப்பவேண்டுமென பலதடவை கூறினேம். இன்றுகூட கட்சி வேற்றுமைகளை மறந்து தமிழர் ஒற்றுமைபட்டால்எதிர்காலம் சுபீட்சமடையும்.

திருவாளர்கள் எஸ். [illegible]நாயகம், சி. பாலசிங்கம், சுப்பிரமணியம் ஆகியோரும்பேசினர்கள்.


2வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி கொழும்பு | பிளாஸா வெள்ளவத்தை | நவா கொம்பனித்தெரு

விஜயா
மட்டக்களப்பு
மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

**தாயின் மடியில்**

கடைசி வாரம்
வெலிங்டன்
யாழ்ப்பாணம்

ஜெமினி கணேசன் — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த

**வல்லவனுக்கு வல்லவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாட்டிய நிகழ்ச்சி

யாழ்ப்பாண ரோட்டரி கிளப்பின் உடல் தேற்று ஆஸ்பத்திரி உதவிநிதிக்காக, ஈழத்திலும், சென்னையிலும் புகழ்பெற்ற செல்வி திரிபுர சுந்தரி குமாரசாமி அவர்களின் அழகிய பரதநாட்டியக் கச்சேரி வருகிற 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறுகிறது. நாட்டிய கலாகேசரி ஸ்ரீ வழுவூர் ராமையாபிள்ளை, ஸ்ரீ வழுவூர் சாமராஜன் குழுவினர், நட்டுவாங்கம் 'சாதிஞ்சனே' என்ற ஸ்ரீ தியாகராஜரின் பஞ்சரத்ன கீர்த்தனத்துக்கு பரதமாடுவது புதிய ஒரு விசேஷ அம்சமாகும். 17-ந் திகதி வெள்ளியன்று கொழும்பு சர்வகலாசாலைப் புதிய மண்டபத்தில் இதே கச்சேரி நடைபெறுகிறது.

ஆலயபிரவேசம்

# முதல் முயற்சி வெற்றியளித்துள்ளது

## சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

'முதல் முயற்சியிலேயே எமது ஆலயப்பிரவேசநேரடி நடவடிக்கை முழுவெற்றியையுமளித்துள்ளது மிக மகிழ்ச்சியைத்தந்துள்ளது.'

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லூர் வீரமாகாளிஅம்மன் ஆலயத்தில் சிறுபான்மைத் தமிழர் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

கடந்தகாலங்களில் சிறுபான்மைத்தமிழர் சமூகத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாகவே இந்த ஆலயப்பிரவேச முயற்சி முழுவெற்றியளித்துள்ளது எனலாம். இதற்காக நல்லூர் வீரமாகாளிஅம்மன் கோவில் நிர்வாகிகளுக்கும் அர்ச்சகருக்கும் எமது முன்னணி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

எனினும் திருநெல்வேலி காயரோகனேஸ்வரர் கோவில், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவில் ஆகியவற்றின் கதவுகள் மூடப்பட்டிருந்ததினால் நாம் திட்டமிட்டபடி அங்கு ஆலயப்பிரவேசம் செய்யமுடியவில்லை. மேற்படி ஆலயங்களின் முன்னுள்ள தேநீர்க்கடையில் நாம் பிரவேசித்து தேநீர் அருந்தினோம். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக நாம் எடுத்த நடவடிக்கைகளைக் கைவிடமாட்டோம். [ந. நி.]

## இருட்டும் திருட்டும்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரிப் பகுதியில் மீண்டும் திருடர் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர எல்லைக்குள்ளிருக்கும் வீதி மின்சார விளக்குகள் அதிகாலையிலேயே அணைபட்டுவிடுவதால் திருடர்கள் இந்த இருட்டைப் பயன்படுத்தி திருட்டை நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்சாரத்துக்கு 6 கோடி ரூபாய்

சென்னை, மார்ச் 11

தமிழ் நாட்டு கிராம மின்சாரத் திட்டத்திக்கென மத்திய அரசாங்கம் மேலும் 6கோடி ரூபாய் கடன்வழங்கியிருக்கிறது.

இதுவரை தமிழ்நாடு கிராம மின்சாரத் திட்டத்திதுக்கென 26 கோடியே 20 லட்சம் ரூபா நன்கொடை வழங்கியிருக்கின்றது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சங்குவேலி கி. மு. சங்க நிர்வாகிகள்

உடுவில், சனி

சங்குவேலி கிராம முன்னேற்றச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. சி. அரசகுலரத்தினம் தலைமையில் நடைபெற்றது. குடிசைக் கைத்தொழில்அபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. பாலசுந்தரம் தலைமையில் புதியநிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். சங்குவேலி நெசவு நிலைய ஸ்தாபிகர் திரு. முத்துக்குமாரு இராமலிங்கம் இச்சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு தலைவர்-மு. இராமலிங்கம், உபதலைவர்-என். நடராசா, காரியதரிசி-த. செல்லத்தம்பி, உப காரியதரிசி- வல்லிபுரம், தனாதிகாரி: இ. செல்லத்துரை.

திருவாளர்கள்- வி. கந்தசாமி, ஏ. கந்தசாமி, கே. இராசலிங்கம், எஸ். துரைராசா, எஸ். பஞ்சாட்சரம், எம். கந்தையா ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

## மட்டக்களப்பு . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

யின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையும், தமிழரசுக்கட்சிப் பிரமுகர் திரு, சாம் தம்பிமுத்துவும் சுயேச்சையாக ஒரே தொகுதியில் போட்டியிடுகின்றனர்.

இவர்களுடன் அந்தோனிப்பிள்ளையும் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார் இப்போதைய தலைவர் திரு. திசவீரசிங்கத்தை திரு. கே. கனகசூரியர் எதிர்க்கிறார்.

## வீரமாகாளி அமமன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மைத் தமிழ் சமூகத்தவர்கள் பிரவேசித்து அங்கு பூஜை செய்வித்துப் பிரசாதம் பெற்றது பற்றிப் பத்திரிகைகளில் வெளியான செய்தி சம்பந்தமாகக் கோவில் அர்ச்சகர் நமது நிருபரிடம் தெரிவிக்கையில் கூறினர்.

சிறுபான்மைத் தமிழர் முதன் முதலாகத் தமது ஆலயப் பிரவேசத்தை நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் வெற்றிகரமாக நடத்தியுள்ளார்கள் என்றும் அங்கு கோவில் அர்ச்சகர் அவர்களுக்குப் பிரசாதம் வழங்கினர் என்றும் பத்திரிகைகளில் நேற்று வெளியான செய்தி பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில் அர்ச்சகர் மேலும் குறிப்பிட்டதாவது:

சிறுபான்மைத் தமிழரை கோவிலுக்குள் பிரவேசிக்க அனுமதித்ததாக வெளியாகியுள்ள செய்தியை நான் மறுக்கின்றேன். அவர்கள் சிறுபான்மைத் தமிழர் என்ற ரீதியில் நான் கோவிலுக்குள் அனுமதிக்கவில்லை. வழக்கமாகப் பூஜை நேரங்களில் பக்தர்கள் பிரவேசிப்பது போல் இவர்களும் எந்தவித கோஷங்களும் ஆர்ப்பாட்டங்களுமின்றி அமைதியான முறையில் அங்கு பிரவேசித்ததால் அனுமதிக்கப்பட்டார்கள். இதன் பின்னர் இவர்கள் பூஜைகள் செய்யும்படி வேண்டிக்கொண்டதன் பேரில் பூஜைசெய்து பிரசாதம் வழங்கப்பட்டது. இதற்காக நான் மேற்படி வீரமாகாளி அம்மன் கோவிலில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தவரைப் பிரவேசிக்க அனுமதித்ததாக வெளிவந்த செய்தி ஆதாரமற்றதாகும். [ந. நி.]

## ஒரே சூலில் 8 குழந்தைகளை பிரசவித்த தாய்

மெக்ஸிக்கோநகர், மார்ச் 11

மெக்ஸிக்கோவைச் சேர்ந்த இருபத்தொரு வயதுள்ள ஒரு பெண் எட்டுக் குழந்தைகளை ஒரே தடவையில் பிரசவித்துள்ளார். பிறந்த குழந்தைகளில் நான்கு ஆண். நான்கு பெண். இவற்றில் இரண்டு ஆண் குழந்தைகள் இறந்துவிட்டன.

இருபதாம் நூற்றுண்டில் ஒரு பெண் ஒரே தடவையில் எட்டுக் குழந்தைகளைப் பிரசவித்தது இது மூன்றுவது தடவையாகும். இதற்கு முன்னர் மெக்ஸிக்கோவிலும் சீனுவிலும் இரண்டு பெண்கள் ஒரே சூலில் எட்டுக் குழந்தைகளைப் பெற்றுள்ளார்கள்.

தாயும் ஆறு குழந்தைகளும் சுகமாகவிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

# அதிபர் சுகர்னோ பதவி நீக்கம்?

லண்டன், மார்ச் 11

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோவை இந்தோனேஷிய மக்கள் ஆலோசனை காங்கிரஸ் பதவி நீக்கம் செய்துவிட்டதாக ஜாகர்த்தாவிலிருந்து வெளியாகும் உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவித்தன.

இந்தோனேஷிய இராணுவத் தலைவர் ஜெனரல் சுகார்ட்டோ தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இச்செய்திகள் தெரிவித்தன.

சுகர்னோ விடமிருந்து சகல பதவிகளையும் களையுமாறு இந்தோனேஷிய மக்கள் ஆலோசனை காங்கிரசின் விசேஷ கமிட்டி முன்னர் சிபார்சு செய்திருந்தது.

# கொழும்புத்துறையில் கட்டடவேலை தொழிற்சாலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கட்டடவேலை தொழிற்சாலையொன்று கொழும்புத்துறை கிழக்கில் இம்மாதம் 15-ம் தேதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இத்தொழிற்சாலையில் 16 வாலிபர்கள் 6 மாத காலத்திற்கு பயிற்சிபெறுவார்கள். பயிற்சிபெறும் காலத்தில் இவர்களுக்கு தினம் 2 ரூபா சம்பளம்வழங்கப்படும்.

சிமெந்துகுழைத்தல், சுவர் கட்டுதல், காங்கிரீட்கூடை போடுதல், அத்திவாரம் போடுதல் ஆகியவேலைகளில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

## ராணுவத்தாக்குதல் வழக்கு

சாவகச்சேரி, சனி

தாளையடி இராணுவத் தாக்குதல் வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. எஸ். கே. திரவியநாயகம் முன்னிலையில் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது இவரே முடிக்குரிய வழக்கறிஞராக வழக்கை நடத்த இருந்தாராகையால் விசாரணை ஜூன் முதலாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஜூலை 5-ம் திகதி இயக்கச்சியில் என். டி. டி. பெர்ணன்டோ, கே. பி. சமரசிங்கி, ரி. எவ். சீடின், டபிள்யூ. கே. எம். ரூபசிங்கா ஆகிய நான்கு இராணுவ வீரரும் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி இராஜநாயகம் ஸ்ரனிலோஸ், முத்தையா, யோசேப் ஆகியோருக்கு அடித்துக்காயம் விளைவித்ததாகவும் பொருட்களுக்குச் சேதம்பண்ணியதாகவும்எல்லாமாக நாலுகுற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ளன.

எதிரிகளாகிய நான்கு இராணுவ வீரர்சார்பிலும் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புரக்டர் சி. பாலகிருஷ்ணன் அனுசரணையுடன் ஆஜரானர்.

## தற்கொலை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவைச் சேர்ந்த இருளன் ஆண்டி என்ற இந்தியத் தொழிலாளி தனது வீட்டுக்கருகாமையில் உள்ள ஒரு மரத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இதுசம்பந்தமாக முல்லைத்தீவு மரணவிசாரணை அதிகாரி திரு. செ. தம்பையா ஜே. பி. விசாரணை நடத்தினர். விசாரணையின்போது குடும்பத்தொல்லை காரணமாக அவர் மனமுடைந்திருந்ததாகக் கூறப்பட்டது.

## மரண அறிவித்தல்

**சின்னையா பொன்னம்பலம்**

சின்னையா பொன்னம்பலம் காலமாகிவிட்டார். முன்னாள் கொழும்பு நகரசபை சுகாதாரப் பகுதியிலும் பின்னர் கொழும்பு கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பனியிலும் கடமையாற்றியவரும், விஜயாம்பாளின் அருமைக் கணவரும் சி. பொ. ஜெயறெட்னம் [முன்னாள் ஆபீஸ் ஈக்கியூப்மெண்ட லிமிடற் கொழும்பு, தற்போது கொழும்பு கே. கே. மாதவன் கம்பனி லிமிடற்], லீலாவதி, ஜெயந்தி [வேம்படி மகளிர் கல்லூரி] ஜானகி [கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி] ஆகியோரின் தந்தையும், கே. ரி. ஜெயசிங்கம் [கொழும்பு மாநகரசபை வினையாட்டுப் பகுதி] கே. பாலசிங்கம் [தொழில் மீன்பிடி அமைப்பு] அவர்களின் மைத்துனரும், டாக்டர் ஏ. நல்லையா அரியாலை அவர்களின் சிறியதந்தையுமாவர். அன்னரின் பூதவுடல் 324, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்திலிருந்து ஈமைகிரியைக்காக இன்று [12-3-67] காலை 10 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றூர், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

2359

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org